# கரூர் மாவட்டம்.

## முதல் திருப்புதல் தேர்வு – 2022

## பொதுத் தமிழ் – விடைக்குறிப்பு

வகுப்பு – 12 மொத்த மதிப்பெண்கள் : 90

| வ.எண் | பகுதி – I<br>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். | 14 x 1 = 14 |
|---|---|---|
| 1. | இ) சிற்பி பாலசுப்ரமணியம் | 1 |
| 2. | இ) 1)–(ii), 2)–(iv), 3)–(i), 4)–(iii) | 1 |
| 3. | அ) குறுந்தொகை | 1 |
| 4. | இ) பண்புத்தொகை | 1 |
| 5. | ஆ) தண்டியலங்காரம் | 1 |
| 6. | இ) 4 | 1 |
| 7. | இ) பிறகொரு நாள் கோடை | 1 |
| 8. | ஈ) புனைவு | 1 |
| 9. | ஆ) இராமவதாரம் | 1 |
| 10. | ஈ) நேரிசை வெண்பா | 1 |
| 11. | அ) ஒளிர்கின்ற கதிரவன் | 1 |
| 12. | ஈ) நன்னூல் | 1 |
| 13. | அ) பொருட்குறிப்பு | 1 |
| 14. | ஆ) உயர்திணை, அஃறிணை | 1 |
| | **பகுதி II – பிரிவு –1**<br>**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.** | **3 x 2 = 6** |
| 15. | ➢ மூன்று பெரும்பிரிவுகள்<br>➢ பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் | 1<br>1 |
| 16. | ➢ என் பொய்யான உலகப் பற்று அழிந்தது.<br>➢ அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது. என் பிறவி ஒழிந்தது. | 1<br>1 |
| 17. | ➢ பிறருடைய கைப்பொருளை விரும்பக்கூடாது | 2 |
| 18. | ➢ சிவந்த வானம் போல், உழைப்பால் சிவந்த கைகள்<br>➢ தொழிலாளர், தோல் மீது முத்து முத்தாக வைத்திருக்கும் வியர்வைத்துளிகளைப் பற்றி | 1<br>1 |

| | | |
|---|---|---|
| | வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் வேண்டுகிறார். | |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** | 2 x 2 = 4 |
| 19. | விடியற்காலையில் புல்லின் மீது உள்ள பனிநீரைக் கண்டு இரசித்தேன்.<br>(ஏற்புடைய சொற்றொடர் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக.) | 2 |
| 20. | ➢ நடைபெற்றியலும், நடைநவின்றொழுகும் என்றும் சில சொற்றொடர்கள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது.<br>➢ "ஆசிரிய நடைத்தே வஞ்சி, ஏனை வெண்பா நடைத்தே கலி" என்ற நூற்பாவில் 'நடை' என்ற சொல் தொல்காப்பியத்தில் எடுத்தாளப் பட்டுள்ளது | 1<br><br>1 |
| 21. | ➢ புக்கில் – தற்காலிகமாகத் தங்குமிடம்<br>➢ தன்மனை – திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோர்களிடம் இருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் . | 1<br>1 |
| | **பிரிவு – 3**<br>**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** | 7 x 2 =14 |
| 22. | ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சிவிதி தருக.<br>**அ) ஆங்கவற்றுள்** – ஆங்கு + அவற்றுள்<br>விதி 1 : உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் – ஆங்க் + அவற்றுள்<br>விதி 2 : உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – ஆங்கவற்றுள்<br><br>**ஆ) வெங்கதிர்** – வெம்மை + கதிர்<br>விதி 1 : ஈறுபோதல் – வெம் + கதிர்<br>விதி 2 : முன்னின்ற மெய் திரிதல் – வெங்கதிர் | 2 |
| 23. | பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக<br>அ) அவருக்கு நன்மையும் தீமையும் நன்றாகத் தெரியும்.<br>ஆ) வறட்சி அனைத்து இடங்களையும் பாதித்துள்ளது. | <br>1<br>1 |
| 24. | மயங்கொலிச் சொற்களை ஒரே தொடாமல் அமைத்து எழுதுதல் | |

| | | |
|---|---|---|
| | **விலை, விளை, விழை**<br>பாபு, **விளைந்து** கிடக்கும் நெற்பயிரை **விலை** கொடுத்து வாங்க **விழைந்தான்.** | 2 |
| 25. | சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைத்தல்<br>**அ) கால்நடை:**<br>கால்நடை வளர்ப்பதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம்<br>பழனிக்கு பக்தர்கள் கால்நடையாகச் சென்றனர்.<br>**ஆ) பிண்ணாக்கு:**<br>கால்நடைகள் பிண்ணாக்கை விரும்பித் தின்னும்<br>பாம்பு பிளவுபட்ட நாக்கை உடையது. | 1<br><br><br><br><br>1 |
| 26. | ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும். | 2 |
| 27. | ஆங்கிலச்சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்கள்<br>அ) வெளியேறுதல் ஆ) நூல் நிரல் | 1<br>1 |
| 28. | ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக:–<br>**அ) வந்து – வா(வ) + த்(ந்) + த் + உ**<br>வா – பகுதி ; வ எனக் குறுகியது விகாரம்<br>த் – சந்தி ; த் ந் ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி<br><br>**ஆ) உயர்ந்தோர் – உயர் + த்(ந்) + த் + ஓர்**<br>உயர் – பகுதி<br>த் – சந்தி ; த் ந் ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி | 2 |
| 29. | இலக்கணக் குறிப்பு தருக.<br>அ) உயர்ந்தோர் – வினையாலணையும் பெயர்<br>ஆ) வியர்வை வெள்ளம் – உருவகம் | 1<br>1 |
| 30. | மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக<br>அ) பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர் | 1 |


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ஆ) வாழைத்தோப்பில் குயில்கள் கூவிக்கொண்டும் காகங்கள் கரைந்து கொண்டும் இருந்தன. | 1 |
| | **பகுதி – III – பிரிவு – 1**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** | **2 x 4 = 8** |
| 31. | தன்னிகாரில்லா தனிமொழி – திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் – இயல், இசை, நாடகம், செய்யுள், காப்பியம், இதிகாசம், புராணம், கவிதை, கதை எனப் பல தளங்களில் தவழும் செந்தமிழ்!<br>**(ஏற்புடைய கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக.)** | 4 |
| 32. | ➢ செய்யாமல் செய்த உதவிக்கு விண்ணுலகமும் மண்ணுலகமும் ஈடாகாது.<br>➢ உரிய காலத்தில் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் உலகைவிடப் பெரியது.<br>➢ பயனை ஆராயாமல் செய்த உதவி கடலை விடப் பெரியது. | 4 |
| 33. | **சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமைகள்**<br>➢ "எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள்" இவை என்று கண்டவர் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும் சந்தனக்கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து வைத்தான்.<br>➢ தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான்.<br>➢ பூக்களையும் கொண்டுவந்து தூவினான்.<br>➢ மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான்.<br>➢ தெளிந்த நீரையும் எடுத்து வந்தான்.<br>➢ இறுதிச்சடங்கு செய்யப்படக் கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான்.<br>**(நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 34. | ➢ சூரியன் திடீரென தனது கதிர்களைப் பூமிக்கு அனுப்பியது.<br>➢ மழை நின்றதால் சுவர்கள் மீது வழிந்தோடிய மழைநீர் நின்றது. | |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ➢ கொஞ்சம் இருந்த நீர் சுவடுகளையும் சுவர் வேகமாகத் தன்வசப்படுத்திக் கொண்டது.<br>➢ ஈரமான மரங்கள் தங்கள் கிளைகளை அசைத்து தன்மீது படர்ந்திருந்த மீதமான நீர்த்துளிகளையும் உதறியது.<br>➢ வெயிலைக் கண்டதால், மழை நீருக்கு அஞ்சியிருந்த பறவை உற்சாகம் வெளிப்பட தன் குரலால் சங்கீதம் இசைத்தது.<br>➢ இவையே அவ்வூரில் மழையிலிருந்து விடுபடுவதைக் குறிப்பிடும் குறியீடுகளாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்.<br>**(நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** | 2 x 4 = 8 |
| 35. | ➢ இக்கூற்று தொல்காப்பிய எச்சவியலில் இடம் பெற்றுள்ளது.<br>➢ நீர்பட்ட பசுமையான கலம் – தொகாமல் வருகிற தொடர் மொழி<br>➢ இது நீர்படு பசுங்கலம் – தொகை மொழி<br>➢ தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு<br>➢ வாக்கிய அமைப்பில் ஒரு சொல் போலவே வருதல் | 1<br>1<br>1<br>1 |
| 36. | **சங்கப்பாடல்களில் ஒலிக் கோலம்**<br>➢ எந்த தொன்மையான மொழியும் சமக்குழுயிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது.<br>➢ "கடந்தடு தானை மூவிருங்கூடி உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே" – வல்லின மெய்கள் மிகுந்து வருதலைக் காணலாம்.<br>➢ "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக"<br>➢ "புணரின் புணராது பொருளே" போன்ற பாடல் வரிகளில் உயிரொலிகள் குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில | 1<br>1<br>1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. | 1 |
| 37. | **சிலம்பு கழி நோன்பு**<br>➢ சங்க காலத்தில் திருமணத்திற்குப்பின் மனைவியை அழைத்து வந்தபோது, தலைவனின் தாய் அவளுக்குச் சிலம்பு கழி நோன்பு செய்திருக்கிறாள்.<br>➢ நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்<br>எம்மனை வதுவை நல்மணம் கழிக (ஐங்–399) | 2<br><br>2 |
| 38. | <br> | 4 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** | **3 x 4 = 12** |
| 39. | பொருள் வேற்றுமை அணி<br>➢ **அணி விளக்கம் –** இரு வேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.<br>➢ **சான்று –** 'ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி'<br>➢ **சான்று விளக்கம் –** தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னரில்லாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று. | 2<br><br>1<br><br>1 |

| | | |
|---|---|---|
| 40. | இலக்கிய நயம் பாராட்டல்<br>➢ மையக்கருத்து<br>➢ திரண்ட கருத்து<br>➢ தொடை நயம் – எதுகை<br>வெட்டி /கொட்டி<br>சட்டச்சட / எட்டு<br>➢ மோனை<br>வீரத் – விண்ணை<br>கூவென்று – குடையுது | <br>1<br>1<br><br><br><br>2 |
| 41. | பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக<br>1. சான்றோர்க்கு மதிப்பு கொடுத்தால் வாழ்வில் உயரலாம்.<br>2. காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்.<br>3. மாறனின் பேச்சுத்திறனை யாரால் வெல்ல முடியும்?<br>(அல்லது) மாறனைப் பேச்சுத்திறனால் யார் வெல்ல முடியும்?<br>4. குமரனை வீட்டில் பார்த்தேன் . | <br><br>1<br>1<br>1<br>1 |
| 42. | 'மழைக்குப் பின் கவிதை' | 4 |
| 43. | தமிழாக்கம் தருக:<br>பெரியார் ஒரு மிகப் பெரிய சமூகப்புரட்சியாளர் மட்டும் அல்லர் அதற்கும் அப்பாற்பட்டவர். இவ்வுலகத்தில் இவர் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடி பெயர் பெற்றவர். இதில் அவரின் செயல் மிகவும் விரிவாய் இருந்தது. எவ்விதச் செயல்களைக் கையாண்டாலும் அதன் ஆழம் வரை சென்று, அதனைப் புரிந்து கொண்டு ஓய்வில்லாமல் அதற்கான நிரந்தரத் தீர்வினை மேற்கொள்வார். அவரின் வருகைக்கு பின்னரே மக்களிடையே இருந்த சாதிய வேறுபாடுகள் களையத் தொடங்கியது. | 4 |
| 43 | காது கேளாதவர்களுக்கான மாற்று வினா<br>அ) வெப்பமண்டலப் பகுதி<br>ஆ) தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே<br>இ) நீரும் நீராடலும்<br>ஈ) குளிர வைத்தல் | <br>1<br>1<br>1<br>1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | **பகுதி – VI**<br>**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக** | 3 X6 =18 |
| 44. | ➢ சிவந்த வானம் போல், உழைப்பால் சிவந்த கைகள்<br>➢ தொழிலாளர், வியர்வை வெள்ளம் அவர்கள் தோள் மீது முத்து முத்தாய்க் காட்சியளிக்கும்<br>➢ இவற்றை வியந்து பாடத் தமிழின் துணையின்றி வேறில்லை எனக் கவிஞர் வியந்துரைக்கிறார்.<br>➢ பொங்கிவரும் கவிதை எண்ணத்திற்கு உணவாய் இருக்கிறாய்<br>➢ அறம் வளர்த்த பாண்டியனின் அவையிலே வீற்றிருக்கிறாய்<br>➢ பாரி முதலான வள்ளல்களைப் பெற்றுத் தந்தாய்<br>➢ அன்று நீ செய்த அந்தப் பழமையான நலத்தை மீண்டும் கொண்டுவர கூண்டை உடைத்து வெளியேறும் சிங்கமாய் குளிர் பொய்கைத் தமிழே நீ வெளியே வர வேண்டும். | 1<br>1<br>1<br>1<br>1<br>1 |
| | **(அல்லது)**<br>**சினத்தைக் காத்தல் வாழ்வை மேம்படுத்தும்**<br>➢ தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடத்தில் சினம் கொள்ளாமல் காப்பவரே சினம் காப்பவர். செல்லுபடியாகாத வலியவரிடத்தில் காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?<br>➢ தீமையான விளைவுகள் சினத்தால் வருவதால் சினம் கொள்ளாமல் மறத்தல் வேண்டும்<br>➢ முகமலர்ச்சியையும், அகமலர்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட நமக்கு வேறு பகையில்லை.<br>➢ ஒருவர் தன்னைத்தான் காக்கில் சினத்தைக் காக்க வேண்டும். இல்லையேல் சினம் தன்னையே அழித்துவிடும்.<br>➢ சினம் என்னும் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு, ஒருவரது சுற்றம் எனும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும். | 6 |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 45. | **அ) தாய்வழிக் குடும்பம்**<br>தலைமை – பதிற்றுப்பத்து – சேரநாட்டு மருமக்கள் தாயமுறை<br>**ஆ) தந்தைவழிக் குடும்பம்**<br>சங்க காலத்திலேயே ஆண்மையச் சமூகமுறையும் காணப்படுகிறது. – "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" – பொருள்வயிற் பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் எனப் பல்வேறு சமூகக் களங்களில் காண இயலும்.<br>**இ) தனிக்குடும்பம்:**<br>இளமகவுநிலை குடும்பங்களின் காட்சி கூறுதல் – “மறியிடைப்படுத்த மான்பிணைபோல்” – தாய், தந்தை குழந்தை மூவரும் உள்ளநிலை– தொடக்கநிலை, எளிய, குடும்பம் | 2<br><br>2<br><br>2 |
| | **(அல்லது)**<br>அ)மொழிசார் கலை<br>➢ மொழி சார்ந்த கலை என்பது இலக்கியமே.<br>➢ உவமை, உருவகம் உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் வழக்குகளை கலையியல் வழக்குகளாக மாற்றுகின்றன.<br>➢ இதை கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்பர்.<br>ஆ)ஒலிக்கோலங்கள்<br>➢ எந்தத் தொன்மையான மொழியும், சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்துதான் தொடங்குகிறது.<br>➢ மொழிசார்ந்த கவிதையும், இசையோடும், இசைக்கருவிகளோடும்தான் பிறக்கிறது.<br>➢ ஓசையும், பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதனையே ஒலிப்பின்னல் என்கிறோம்.<br>➢ (எகா) "நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை" (புறம்290) | 2<br><br>2 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | இ) சொற்புலம்<br>➢ சொல்லில்தான் உணர்வும், பொருளும் பொதிந்து கிடக்கின்றன.<br>➢ கலையும், பண்பாடும், வரலாறும், அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.<br>➢ சொல்வளம் என்பது ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒருசொல் வருவனவும் காணப்படுகின்றன.<br>➢ (எகா) முல்லைக்கலியில் காளைகளின் பல இனங்கள் பற்றிய சொற்கள் நிறைய காணப்படுதல்.<br>➢ 'கிடை' என்ற குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்கள் பல பெயர்களில் காணப்படுதல். | 2 |
| 46. | பாரதியின் மொழிப்பற்று – சமூகப் பற்று<br>மொழிப்பற்று – தமிழ்ப்பள்ளிகள்<br>சமூகப்பற்று – ஆணும் பெண்ணும் சமம் – வியாபாரம் – தொழிற்சாலைகள் – தொழில்கள் பெருகுக. | 3<br>3 |
| | **(அல்லது)**<br>"உரிமைத் தாகம்" கதையில் சகோதரர்கள் இருவரும்ஒன்றிணையாமல் இருந்திருந்தால்<br>கதைச் சுருக்கம் – அண்ணன் தம்பி தகராறு – நிலத்தை அடகு வைத்தல்– நிலத்தை மீட்காத சூழல்<br>இது போல பிற தலைப்புகள் இருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>("உரிமைத்தாகம்" கதை எழுதியிருப்பின் பாதி மதிப்பெண் வழங்கலாம்.) | 6 |
| | **பகுதி V**<br>**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** | **4+2=6** |
| 47. | அ) ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி<br>ஏங்கொலிநீர்ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்<br>மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது<br>தன்னேர் இலாத தமிழ்!<br>– தண்டி | 4 |
| | ஆ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்<br>ஏமப் புணையைச் சுடும். | 2 |